# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,504 — 1965 සැප්තැම්බර් 11 වැනි සෙනසුරාදා — 1965.9.11**

14,504 ம் இலக்கம் — 1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ந் திகதி சனிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I: தொகுதி (I)—பொது

*[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]*

## விலைக்கட்டளைகள்

விலைக்கட்டளை இலக்கம் : என். ச. 97. **உப உணவுப்பொருட்கள்.**

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (173 ம் அத்தியாயம்) 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நுவரெலியா பரிபாலன மாவட்டப் பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), இளேகுட்டி ஒலிவர் கென்னத் காமினி பெர்ணண்டோ ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ம் திகதி வெளிவந்த 14,485 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் திகதியைக் கொண்ட என். ச. 94 ம், 95 ம், 96 ம் இலக்க விலைக்கட்டளைகளை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் 2 ம் அட்டவணையின் 3 ம், 4 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (173 ம் அத்தியாயம்) கீழ் கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்துக்குத் தற்போதைக்கென மொத்த வியாபாரி ஒருவருக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையுடன் மேலதிக விலையாகக் கூட்டி மொத்த வியாபாரி ஒருவரின் ஆகக்கூடிய அந்தர் ஒன்றின் மொத்த வியாபார விலையாகவும் குறித்த சட்டத்தின் கீழ் கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்துக்கு தற்போதைக்கெனச் சில்லறை வியாபாரி ஒருவருக்கு இறாத்தல் ஒன்றுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையுடன் மேலதிக விலையாகக் கூட்டி சில்லறை வியாபாரி ஒருவரின் ஆகக்கூடிய நிகர இறாத்தல் ஒன்றின் சில்லறை விலையாகவும் குறித்த அட்டவணையின் நேரொத்த 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களை இந்த விலைக்குக் கூடுதலாக 1 ம் அட்டவணையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2 ம் அட்டவணையின் 2 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் விற்கலாகாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையிலாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து எவராவது விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையை ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி, அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இறாத்தல் " அல்லது " இறா. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இறாத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(8) இரண்டாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பொருள் விற்கப்படுமிடத்து குறித்த அட்டவணையின் 3 ம், 4 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளுள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(9) இக்கட்டளை உடஹேவாஹெட்ட பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிக்குச் செல்லுபடியாகாதெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8 ம் திகதி பி. ப. 3.00 மணிக்கு நுவரெலியாக் கச்சேரியில் வைத்துக் கையொப்பமிடப்பட்டது.

ஐ. ஓ. கே. ஜீ. பெர்ணாண்டோ,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
நுவரெலியா மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

எல்லை 1 .. மாவெல, மொரப்பே, கடதோர, மாஸ்வெல, ஹபுகஸ்தலாவ, தொருவாதெனிய, ஹரங்கல, நவன்கம, கலப்பிட்டிய, ஹேதுணுவ, ராவணகொட, விஜேபாகுக் கந்தகொட்டகலை, தலவாக்கலை, அக்கரப்பத்தனை கிராம சேவையாளரின் பிரிவுகள்.

எல்லை 2 .. மெதகம, மடக்கும்புர, கடதோரப்பிட்டிய, துனுகேதெனிய, கும்பல்ஒளுவ, நியங்கன்தோர, சங்கிலிப்பாலம, ரம்பொடகம, பனங்கம்மன, ரம்பொடை டவுன, கொட்டகேப்பிட்டிய, திஸ்பனே, வடத்தரை, ரொஜசன்கம கிராம சேவையாளரின் பிரிவுகள்.

எல்லை 3 .. நுவரெலியா, கந்தப்பளை, நானுஓயா, நில்தண்டாஹின்ன, ஹர்ஸ்பத்தை, பட்டகொல்ல, பட்டிப்பளை, கொரண்டிஹெல, கெட்டகந்துர, திப்பட்டுக்கொட, பன்னல, கும்பல்கமுவ கிராம சேவையாளரின் பிரிவுகள்.

எல்லை 4 .. ராகலை, ருபஹா, மாலியத்த, குருப்பணவெல, அம்பலியத்த கிராம சேவையாளரின் பிரிவுகள்.

எல்லை 5 .. அருக்வத்தை, உடமாதுர, கலகன்வத்த, கல்கெட்டிவெல, அம்பன்வெல்ல, தேனம்புரே, கும்புக்வெல, மதுல்ல கிராம சேவையாளரின் பிரிவுகள்.

எல்லை 6 .. பொலகந்தவெல கிராம சேவையாளரின் பிரிவு.

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>பொருளின் விபரம் | பத்தி 2<br>எல்லை | பத்தி 3<br>கொழும்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட மொத்த வியாபாரியின் அந்தரொன்றுக்கு விதிக்கப்பட்டுள்ள மொத்த வியாபார விலைக்கு மேலதிகமாகக் கூட்டி விற்கப்படவேண்டிய மேலதிக விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>கொழும்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட சில்லறை வியாபாரியின் நிகர இருத்தலொன்றுக்கு விதிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபார விலைக்கு மேலதிகமாகக் கூட்டி விற்கப்பட வேண்டிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| வெங்காயம் (சிறு வெங்காயம், சிக்பெலாபூர் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்) .. .. .. | 1 .. | 1 90 .. | 0 2 |
| | 2 .. | 2 5 .. | 0 2 |
| | 3 .. | 2 20 .. | 0 3 |
| | 4 .. | 2 35 .. | 0 3 |
| | 5 .. | 2 45 .. | 0 4 |
| | 6 .. | 2 55 .. | 0 6 |
| கொத்தமல்லி .. .. .. | 1 .. | 2 90 .. | 0 2 |
| | 2 .. | 3 5 .. | 0 2 |
| | 3 .. | 3 20 .. | 0 3 |
| | 4 .. | 3 35 .. | 0 3 |
| | 5 .. | 3 45 .. | 0 4 |
| | 6 .. | 3 55 .. | 0 6 |
| முழு உழுந்து .. .. .. | 1 .. | 2 90 .. | 0 2 |
| | 2 .. | 3 5 .. | 0 2 |
| | 3 .. | 3 20 .. | 0 3 |
| | 4 .. | 3 35 .. | 0 3 |
| | 5 .. | 3 45 .. | 0 4 |
| | 6 .. | 3 55 .. | 0 6 |
| பாசிப்பயறு .. .. .. | 1 .. | 2 90 .. | 0 2 |
| | 2 .. | 3 5 .. | 0 2 |
| | 3 .. | 3 20 .. | 0 3 |
| | 4 .. | 3 35 .. | 0 3 |
| | 5 .. | 3 45 .. | 0 4 |
| | 6 .. | 3 55 .. | 0 6 |

| பத்தி 1<br>பொருளின் விபரம் | பத்தி 2<br>எல்லை | பத்தி 3<br>கொழும்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட மொத்த வியாபாரியின் அந்தரொன்றுக்கு விதிக்கப்பட்டுள்ள மொத்த வியாபார விலைக்கு மேலதிகமாகக் கூட்டி விற்கப்பட வேண்டிய மேலதிக விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>கொழும்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட சில்லறை வியாபாரியின் நிகர இருத்தலொன்றுக்கு விதிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபார விலைக்கு மேலதிகமாகக் கூட்டி விற்கப்பட வேண்டிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| துவரம் பருப்பு .. .. .. | 1 .. | 2 90 .. | 0 2 |
| | 2 .. | 3 5 .. | 0 2 |
| | 3 .. | 3 20 .. | 0 3 |
| | 4 .. | 3 35 .. | 0 3 |
| | 5 .. | 3 45 .. | 0 4 |
| | 6 .. | 3 55 .. | 0 6 |
| கடலைப் பருப்பு .. .. .. | 1 .. | 2 90 .. | 0 2 |
| | 2 .. | 3 5 .. | 0 2 |
| | 3 .. | 3 20 .. | 0 3 |
| | 4 .. | 3 35 .. | 0 3 |
| | 5 .. | 3 45 .. | 0 4 |
| | 6 .. | 3 55 .. | 0 6 |
| புளி .. .. .. .. | 1 .. | 2 90 .. | 0 2 |
| | 2 .. | 3 5 .. | 0 2 |
| | 3 .. | 3 20 .. | 0 3 |
| | 4 .. | 3 35 .. | 0 3 |
| | 5 .. | 3 45 .. | 0 4 |
| | 6 .. | 3 55 .. | 0 6 |
| உருளைக் கிழங்கு .. .. .. | 1 .. | 1 90 .. | 0 2 |
| | 2 .. | 2 5 .. | 0 2 |
| | 3 .. | 2 20 .. | 0 3 |
| | 4 .. | 2 35 .. | 0 3 |
| | 5 .. | 2 45 .. | 0 4 |
| | 6 .. | 2 55 .. | 0 6 |
| சிறு வெங்காயம் .. .. .. | 1 .. | 1 90 .. | 0 2 |
| | 2 .. | 2 5 .. | 0 2 |
| | 3 .. | 2 20 .. | 0 3 |
| | 4 .. | 2 35 .. | 0 3 |
| | 5 .. | 2 45 .. | 0 4 |
| | 6 .. | 2 55 .. | 0 6 |
| சர்க்கரை .. .. .. | 1 .. | 2 90 .. | 0 2 |
| | 2 .. | 3 5 .. | 0 2 |
| | 3 .. | 3 20 .. | 0 3 |
| | 4 .. | 3 35 .. | 0 3 |
| | 5 .. | 3 45 .. | 0 4 |
| | 6 .. | 3 55 .. | 0 6 |
| மைசூர்ப் பருப்பு (உடைத்து இறக்குமதி செய்யப்பட்டது) (முதலாம் ரகம்) .. .. .. | 1 .. | 2 90 .. | 0 2 |
| | 2 .. | 3 5 .. | 0 2 |
| | 3 .. | 3 20 .. | 0 3 |
| | 4 .. | 3 35 .. | 0 3 |
| | 5 .. | 3 45 .. | 0 4 |
| | 6 .. | 3 55 .. | 0 6 |
| மைசூர்ப் பருப்பு (உள்ளூரில் குத்தப்பட்டது) (இரண்டாம் ரகம்) | 1 .. | 2 90 .. | 0 2 |
| | 2 .. | 3 5 .. | 0 2 |
| | 3 .. | 3 20 .. | 0 3 |
| | 4 .. | 3 35 .. | 0 3 |
| | 5 .. | 3 45 .. | 0 4 |
| | 6 .. | 3 55 .. | 0 6 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருட்களை விற்கலாகாது.

9-645/1

---

**விலைக்கட்டளை இலக்கம்:** என். ஈ. 98 — **மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி.**

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (173 ம் அத்தியாயம்) 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நுவரெலியா பரிபாலன மாவட்ட பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) இளேகுட்டி ஒலிவர் கென்னத் காமினி பெர்ணண்டோ ஆகிய யான் இக்கட்டளையால் —

(1) 1964 ம் ஆண்டு மே மாதம் 22 ம் திகதி வெளிவந்த 14,041 ம் இலக்க அதி விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1964 ம் ஆண்டு மே மாதம் 20 ம் திகதியைக் கொண்ட என். ஈ. 92 ம் இலக்க விலைக்கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 தொடக்கம் 6 வரையுள்ள பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளே அப்பத்திகளின் தலைப்பில் விபரிக்கப்பட்டிருக்கும் மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி ஆகியவற்றுக்கு ஒரு இருத்தலுக்கு ஆகக்கூடிய விலைகளாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைகட்குள் இவ்விலைகட்கு மேலாக மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி ஆகியன விற்கலாகாது எனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) " மாட்டிறைச்சி " என்பது மாட்டினதும் எருமையினதும் கழிவு உறுப்புக்கள் தவிர்ந்த தசையாகும்;

(ஆ) " ஈரல் " என்பது மாட்டின் அல்லது பசுவின் ஈரல்;

(இ) " ஆட்டிறைச்சி " என்பது செம்மறி அல்லது வெள்ளாட்டின் கழிவு உறுப்புக்கள் தவிர்ந்த தசையாகும்;

(ஈ) எம் மிருகத்தின் சடலமேனும் கொலைக்களத்தில் விற்பனைக்குத் தயாராக்கப்பட்டபடி (தலை, தோல், குடல், குளம்புகள், கழிவுகள் மற்றும் வழமையாகக் கழிக்கப்படும் எல்லாக் கழிவுப் பொருள்களும் தவிர) விற்கப்படும் பொழுது அவ்விற்பனை " உயிரற்ற நிறை " யில் விற்பனையாகக் கருதப்படுதல் வேண்டுமெனவும் ஆக்ஞையிடுகிறேன்.

(4) மாட்டிறைச்சி அல்லது ஆட்டிறைச்சி எலும்புகளுடன் விற்கப்படுமிடத்து அதனுடன் சேர்ந்த எலும்பின் நிறை, விற்கப்படும் மொத்த நிறையின் 25 சத விகிதத்திற்கு மேற்படலாகாது எனவும் கட்டளையிடுகிறேன்.

(5) இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லைகட்குள் எவ்விடத்திலாவது அட்டவணையின் மற்றப் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி முதலியன விற்பனைக்காக வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் இக்கட்டளையால் விதிக்கப்பட்டிருக்கும் ஆகக்கூடிய விலைகள் அடங்கிய அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென விதிக்கிறேன்.

(6) மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி ஆகியன விற்பதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் கடைகளில் மாத்திரம் மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி ஆகியன விற்கவோ அல்லது விற்பனைக்காக வைத்திருக்கவோ வேண்டுமென்றும், இக்கடைகளிற் குறிப்பிட்ட விபரமும் தரமும் கொண்ட மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி ஆகியன அன்றி வேறெந்த வகையான இறைச்சியும் விற்கக்கூடாதெனவும் கட்டளையிடுகிறேன்.

(7) இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்ட இடப்பரப்பினுள்ள எவ்விடத்திலாவது குறித்த அட்டவணையில் சொல்லப்பட்ட பொருட்கள் விற்கப்படும்பொழுது குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்ட விபரமும் தரமும் கொண்ட மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி ஆகியன மட்டுமே விற்கப்படுகின்றது என்னும் பொருள் கொண்ட அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(8) ஒரு விற்பனையில் மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி ஆகியவற்றுடன் கழிவுகளும் விற்கப்படின் மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி ஆகியன கழிவுகளிலிருந்து வேறாக நிறுத்து விற்கப்படல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(9) ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி ஆகியன விற்கும்பொழுது தன்னுடைய நிறுக்கும் தராசையோ அல்லது தராசுகளையோ வாங்குபவர் தாம் வாங்கும் மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி ஆகியவற்றின் உண்மையான நிறையை இலகுவாக அறிந்து கொள்ளக்கூடிய விதமாக வைத்தல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(10) இதனோடிருக்கும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சி, ஈரல், ஆட்டிறைச்சி விற்பனை செய்யும் ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி, ஈரல் அல்லது ஆட்டிறைச்சி வாங்குபவர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி;
(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சி, ஈரல் அல்லது ஆட்டிறைச்சியின் நிறை;
(இ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சி, ஈரல் அல்லது ஆட்டிறைச்சியின் விபரம்;
(ஈ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சி, ஈரல் அல்லது ஆட்டிறைச்சிக்குக் கொடுக்கப்பட்ட விலை.

(11) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைக்குள் எவரும் இதனோடிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களை வேறு இறைச்சியுடனோ அல்லது மாமிசத்துடனோ கலந்து விற்கலாகாது.

(12) இதனோடிருக்கும் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் பொருட்களை விற்கும்போது அவற்றைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் பத்தியிலிருந்து 6 ம் பத்தி வரை குறிக்கப்பட்டிருக்கும் ஆகக்கூடிய விலைகட்குள் அடங்க வேண்டும்.

(13) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது நிறுத்தலளவை முறையின் பிரமாண " அவோர்டு போஸ் " இருத்தலாகக் கருதப்படுமென்று ஆக்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8 ம் திகதி பி. ப. 3 மணிக்கு நுவரெலியாக் கச்சேரியில் வைத்துக் கையொப்பமிடப்பட்டது.

ஐ. ஓ. கே. ஜீ. பெர்னாண்டோ,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
நுவரெலியா மாவட்டம்.

**அட்டவணை**

| பத்தி 1<br>எல்லை | | பத்தி 2<br>மாட்டிறைச்சி (எலும்பில்லாமல்) ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | | பத்தி 3<br>மாட்டிறைச்சி (எலும்புடன்) ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | | பத்தி 4<br>ஈரல் ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | | பத்தி 5<br>ஆட்டிறைச்சி (எலும்பில்லாமல்) ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | | பத்தி 6<br>ஆட்டிறைச்சி (எலும்புடன்) ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நுவரெலியா மாநகர சபைக்குட்பட்ட பிரதேசம் | .. | 0 95 | .. | 0 75 | .. | 1 10 | .. | 2 70 | .. | 2 50 |
| நாலு கடவைக் கிராம சபைக்குட்பட்ட பிரதேசம் | .. | 0 95 | .. | 0 75 | .. | 1 10 | .. | 2 70 | .. | 2 50 |
| உடப்பலாத்தை கிராம சபைக்குட்பட்ட பிரதேசம் | .. | 1 0 | .. | 0 80 | .. | 1 25 | .. | 2 75 | .. | 2 50 |
| திம்புளை கிராம சபைக்குட்பட்ட பிரதேசம் | .. | 1 0 | .. | 0 80 | .. | 1 25 | .. | 2 75 | .. | 2 50 |
| தலவாக்கலை-லிந்துலை நகர சபைக்குட்பட்ட பிரதேசம் | .. | 1 0 | .. | 0 80 | .. | 1 25 | .. | 2 75 | .. | 2 50 |
| உடப்பனை கிராம சபைக்குட்பட்ட பிரதேசம் | .. | 1 0 | .. | 0 75 | .. | 1 25 | .. | 2 75 | .. | 2 50 |
| திஸ்பனை கிராம சபைக்குட்பட்ட பிரதேசம் | .. | 1 0 | .. | 0 80 | .. | 1 25 | .. | 2 75 | .. | 2 50 |
| பள்ளேபனை கிராம சபைக்குட்பட்ட பிரதேசம் | .. | 1 0 | .. | 0 80 | .. | 1 25 | .. | 2 75 | .. | 2 50 |
| பூண்டுலோயா பட்டின சபைக்குட்பட்ட பிரதேசம் | .. | 1 0 | .. | 0 80 | .. | 1 25 | .. | 2 75 | .. | 2 50 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகட்கு மேலாக அப்பொருட்களை விற்கலாகாது.

9-645/2

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.